**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **CC.No. 47/2018**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**1**

**Defence**
**Court**

**Name** **:** காசிராஜா

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873

on the day of **14.11.2022**

**முதல் விசாரணை**:

நான் தற்போது மதுரை மாவட்டம் எழுமலை காவல் நிலையத்தில் பயிற்சி சார்பாய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 28.08.2017 அன்று சேடபட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பாய்வாளராக பணியில் இருந்தபோது காலை 7.00 மணியளவில் காவல் ஆய்வாளர் அவர்களுடன் கஞ்சா மற்றும் போதை பொருள் தடுப்பு சம்பந்மாக நான் மற்றும் பேரையூர் காவல் நிலைய பெண் சார்பாய்வாளர் திருமதி.ராணி, சேடபட்டி காவல்

நிலைய தலைமைக்காவலர் - அப்துல்ரகிம்சேட் ஆகியோருடன் தக்க உபகரணங்களுடன் காவல் வாகனத்தில் சேடபட்டி காவல் சரகத்தில் ரோந்து செய்தபோது பெரியகட்டளைமந்தை அருகில் காலை 8.45 மணியளவில் மேற்படி மந்தை அருகில் உள்ள வீட்டின் பின் புறம் நின்றிருந்த பெண் ஒருவர் எங்கள் போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பெண் சார்பாய்வாளர் உதவியுடன் அந்த பெண்ணை பிடித்து விசாரிக்க அவர் கையில் வெள்ளை நிற சாக்குபையுடன் இருந்தார். அவரை விசாரிக்க பெயர் விலாசம் கூறினார். அவரிடம் பின்னர் நாங்கள் எங்களை சுய அறிமுகம் செய்துகொண்டு போதைபொருட்கள் தங்களிடம் உள்ளதாக தகவல் உள்ளது. எனவே, தங்களை சோதனை இட வேண்டும் என்றும் தாங்கள் விரும்பினால் அருகில் உள்ள நடுவரிடமோ அரசு பதிவிதழ் பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது என்று கூறியபோது அவர் அங்கு அழைத்து செல்ல விரும்பவில்லை என்றும் போலீஸ் பார்ட்டியாகிய தாங்களே சோதனை செய்யலாம் என கூறினார். காலை 8.50 மணிக்கு அவரிடம் சோதனை சம்மத கடிதம் எழுதி பெற்றோம். அதன் பின்னர் பெண் சார்பு ஆய்வாளரிடம் எதிரி ஆஜர் செய்த வெள்ளை நிற சாக்குபையை அவர் சோதனை செய்ய அதை கஞ்சா எனும் போதை பொருள் இருந்தது. அவரை கஞ்சா வைத்திருந்த காரணத்திற்காக காலை 9.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் உதவிடன் ஆய்வாளர் உதவி செய்தார். பின்னர் எதிரி தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும் தலைமை காவலரும் சாட்சியாக கைொயாப்பம் செய்தோம். எதிரியும் கையொப்பம் செய்தார். நாங்கள் கொண்டு சென்றிருந்த தராசில் கஞ்சாவை எடைபோட்டபோது அது 1.500 கிராம் கஞ்சா இருந்தது. அதை தனி நபர்கள் எவரும் இல்லாததால் போலீஸ்பார்ட்டியாகிய எங்கள் மூன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார். அதிலிருந்து பகுப்பாய்வுக்காகவும், நிலையான மாதிரிக்காகவும் தலா 50 கிராம் வீதம்

பிரவுன் கலர் பேப்பரில் மடித்து நூலால் கட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்து S1 , S2 என்று குறியீடு செய்தோம். மீதம் இருந்த 1 கிலோ 400 கிராம் கஞ்சாவை பிரவுண் பேப்பரில் சுற்றி பி-1 என குறியீடு செய்தோம். அவ்வாறு பொருள்களை கைப்பற்றிய அத்தாட்சியில் நானும் தலைமைக்காவலரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். 10.15 மணிக்கு சொத்துக்களையும் எதிரியையும் நிலையம் கொர்ண்டு வந்து நிலைய நிலைய குற்ற எண் 177/2017, ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act ஆக வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இதுசம்பந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார். சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.1 ஆகும். அத்தாட்சி அ.சா.ஆ. 2 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நாங்கள் சாதாரணமாக ரோந்து சென்ற போதுதான் எதிரியை கைதுசெய்தோம். வெவ்வேறு கிராமங்களுக்கு ரோந்து சென்றுவிட்டு சம்பவ இடம் சென்றோம். சின்னக்கட்டளை, சென்னம்பட்டி, காளப்பன் பட்டி, பெருங்காமநல்லூர் போன்ற இடங்களுக்கு சென்று ரோந்து செய்தோம். காவல் நிலையத்தில் இருந்து சுமார் 7.00 மணிக்கு ஆய்வாளரின் வாகனத்தில் புறப்பட்டு சென்றோம். சம்பவ இடத்திற்கு சுமார் காலை 8.45 மணிக்கு சென்றோம். சோதனை சம்மத கடிதத்தை தலைமைகாவலர்-அப்துல்ரகிம்சேட் எழுதினார். அவர் அந்த ஆவணத்தில் கையொப்பம் செய்தார். நானும் கையொப்பம் செய்தேன். சோதனை சம்மத கடிதத்தில் பெண் சார்பாய்வாளரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் பெண் சார்பாய்வாளர் மூலம் சோதனை செய்யப்பட்டதாக குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலமும், அத்தாட்சியும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அது தயாரிக்கப்பட்டது. ஆய்வாளர் மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. மடிக்கணினியில் நேரடியாக

பிரிண்ட் எடுக்கமுடியாது என்றால் சரிதான். அத்தாட்சியில் S1. S2 and P1 என குறிப்பட்டதாக விபரங்கள் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் 1-15 மணி நேரம் இருந்தோம். சம்பவ இடம் எதிரியின் வீட்டின் பின் புறம் ஆகும். அது அவர் சொந்த வீடு என்றால் சரிதான். அத்தாட்சியில் ரேகைமட்டும உள்ளது அது யாருடையது என குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். தனிநபர் சாட்சிகளை ஆய்வாளர் அழைத்தார். ஆனால் எவரும் முன் வரவில்லை. அவ்வாறு முன் வராத நபர்களின் பெயர், விபரம் , விலாசம் பற்றி ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சோதனை சம்மத கடிதம் எதையும் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவற்றிற்கு ஆதரவாக ஆவணங்களை தயாரித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.